செய்தி வெளியீட்டு எண்.965 நாள்: 1.11.2010

# தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நிவாரணத் தொகைகளை வழங்கினார்

**கடலில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் மீனவர்கள், பருவ மழைக் காலங்களில் கடல் சீற்றத்தினாலும், இயற்கை இடர்களினாலும், வருடத்தில் 3 மாதங்கள் மீன்பிடிக்கச் செல்ல இயலாத நிலையில் உள்ளனர். இம்மாதங்களில், மீனவர்களுக்கு உதவிடும் பொருட்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக 2008 ஆம் ஆண்டு வரை நபர் ஒன்றுக்கு ரூ.1200/– வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை, 2009லிருந்து ரூ.1800/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக உள்ள, கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மீனவர் பங்காக, ஒன்பது மாத காலங்களில் அவர்களிடமிருந்து ரூ.600/– வசூலிக்கப்படுகிறது. இதற்கிணையாக, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பாக தலா ரூ. 600/– சேர்த்து ரூ.1800/– நிவாரணத் தொகையாக கடல் மீனவருக்கு வழங்கப்படுகிறது.**

**இதே போல் , மீன்பிடித் தொழில் சார்ந்த மற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள மீனவ மகளிருக்கு மாநில அரசே இந்நிவாரணத் தொகையை வழங்கி வருகிறது. இவ்வாண்டு நிவாரணத்தொகை வழங்க கடல் மீனவர்களுக்கு ரூ.21 கோடியே 91 இலட்சத்து 75 ஆயிரத்து 200–ம் மற்றும் மீனவ மகளிருக்கு ரூ.17 கோடியே 40 இலட்சத்து 72 ஆயிரமும், ஆக மொத்தம் ரூ.39 கோடியே 32 இலட்சத்து 47ஆயிரத்து 200 நிவாரணத் தொகையாக வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம், சுமார் 1 இலட்சத்து 82 ஆயிரத்து 646 கடல் மீனவர்களும், 1 இலட்சத்து 45 ஆயிரத்து 60 மீனவ மகளிரும், மொத்தமாக 3 இலட்சத்து 27 ஆயிரத்து 706 மீனவ சமுதாய மக்கள் பயனடைவர். தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் மீன்வள மானியக் கோரிக்கையின் போது உறுதியளித்தபடி இந்நிவாரணத் தொகை ரொக்கமாக வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்தின் மூலம் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 10 கடலோர மாவட்ட மீனவ மக்கள் பயனடைகின்றனர். கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்கள் 2011 சனவரி மாதத்திலும், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் 2011 ஏப்ரல் மாதத்திலும் இத்திட்டத்தின் மூலம் நிவாரணம் பெறுவர்.**

**இத்திட்டத்தினை புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (1.11.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கு நிவாரணத் தொகைகளை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே.பி.பி. சாமி, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திருமதி எம்.பி. நிர்மலா, மீன்துறை இயக்குநர் திரு கே. செல்லமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.